August 2020

# Chezhumai

## Climate Change

Climate change is a proven fact. Global warming has caused serious changes to the planet, such as rising sea levels, extreme weather events, deforestation, disappearance of species. But as individuals we can slow down global warming by implementing small more sustainable actions within our community

1. Let us adapt to our ancestor's practices in living a simple life with less emission.
2. Do not trouble the forest or the trees in the avenues and plant more useful trees on your land
3. Be very prudent in using energy, home electricity, petrol and diesel for your vehicles
4. Young people have the most at stake when it comes to climate change. Teach your children to be friendly to the environment
5. Learn water conservation practices from TIST Trainers during training. Climate-smart agriculture, water conservation and soil enrichment are very important towards global warming mitigation.



ஆகஸ்ட் 2020

# செழுமை

## பருவநிலை மாற்றம்

பருவநிலை மாற்றம் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. புவி வெப்பமடைதல் கிரகத்தின் கடுமையான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது, அதாவது கடல் மட்டங்கள் உயர்வு, தீவிர வானிலை நிகழ்வுகள், காடழிப்பு, உயிர் இனங்கள் காணாமல் போதல். ஆனால் தனிநபர்களாகிய நாம் நமது சமூகத்திற்குள் இன்னும் சிறிய நிலையான செயல்களைச் செயல்படுத்துவதன் மூலம் புவி வெப்பமடைதலைக் குறைக்க முடியும்.

1. குறைந்த உமிழ்வுடன் எளிமையான வாழ்க்கையை வாழ்வதில் நம் முன்னோரின் நடைமுறைகளுக்கு ஏற்ப மாற்றுவோம்.
2. காடுகளையோ அல்லது மரங்க-ளையோ தொந்தரவு செய்யாதீர்கள் மற்றும் உங்கள் நிலத்தில் மிகவும் பயனுள்ள மரங்களை நடவும்
3. உங்கள் வாகனங்களுக்கு பெட்ரோல் மற்றும் டீசல், அன்றாட தேவை, வீட்டு மின்சாரம், ஆகியவற்றில் பயன்-படுத்துவதில் மிகவும் விவேகத்துடன் இருங்கள்
4. காலநிலை மாற்றத்திற்கு எதிர்-காலத்தில் இளைஞர்களுக்கு அதிக ஆபத்து உள்ளது. சுற்றுச்சூழலுடன் நட்பாக இருக்க உங்கள் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுங்கள்
5. பயிற்சியின் போது TIST பயிற்சியாளர்களிடமிருந்து நீர் பாதுகாப்பு நடைமுறைகளைக் கற்றுக்கொள்ளுங்கள். புவி வெப்-பமடைதலைக் குறைக்க விவேக-த்துடன் விவசாயம் செய்யுங்கள், நீர் பாதுகாப்பு மற்றும் மண் செறிவூட்டல் மிகவும் முக்கியம்.

**TIST Tree Planting India Pvt. Ltd**
Flat A, Plot 69, 26th Street, Sankar Nagar, Pammal, Chennai 600075.
Mobile : 9840299822
Email: josephrexontist@gmail.com
Skype: a.joseph.rexon
Web: www.tist.org

**The International Small Group & Tree Planting Program**

TIST - Planting Trees and Improving Agriculture for Better Lives
டிஸ்ட், மரங்களை நடவு செய்தல் மற்றும் சிறந்த வாழ்க்கைக்கு விவசாயத்தை மேம்படுத்துதல்

## ஜீவாமிர்தம்

திருவண்ணாமலை பயிர்களின் வளர்ச்சி மற்றும் நல்ல மகசூல் பெற ஊக்கசத்துவாக ஜீவாமிர்தம் பயன்படுகிறது. எவ்வாறு தயார்செய்வது என்று இங்கு காணலாம்

### தேவையான பொருட்கள்

நாட்டு பசுஞ்சாணம் – 10 கிலோ
நாட்டு பசுங்கோமியம் – 5 முதல் 10 லிட்டர்
வெல்லம் – 2 கிலோ (அ) கரும்புச்சாறு – 4 லிட்டர்
தானிய மாவு – 2 கிலோ (தட்டைப்பயறு (அ) துவரை (அ) கொள்ளு (அ) கொண்டைக் கடலை (அ) உளுந்து)
காட்டின் மண் – கையளவு
தண்ணீர் – 200 லிட்டர் (குளோரின் கலக்காதது)

### தயாரிக்கும் முறை

200 லிட்டர் தண்ணீரில் சாணம், கோமியம், வெல்லம் அல்லது கரும்புச்சாறு, தானியமாவு ஆகியவற்றுடன் கையளவு மண் சேர்த்து ஒரு தொட்டியில் இட்டு கலக்க வேண்டும்.

தினமும் 3 முறை 3 நாட்களுக்கு தவறாமல் கலக்கி விடவேண்டும். ஒரு கிராம் மண்ணில் 5 லட்சம் கோடிக்கும் அதிகமான நுண்ணுயிரிகள் இருக்கின்றன. ஒவ்வொரு 20 நிமிடத்துக்கும் இந்த நுண்ணுயிரிகள் இரட்டிப்பு அடைகின்றன.

இவ்வாறு கலக்கப்பட்ட இந்த நுண்ணுயிர் கலவைதான் ஜீவாமிர்தம்.

தெளிப்புக்காக எடுக்கும்போது கரைசலின் மேற்புறத்தில் இருக்கும் தெளிவை மட்டும் எடுத்து வடிகட்டிப் பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு பயிருக்கும் குறிப்பிட்ட அளவு வடிகட்டிய ஜீவாமிர்தத்தை, குறிப்பிட்ட அளவு நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

### கன ஜீவாமிர்தம்

பசுஞ்சாணம் 100 கிலோ, 2 கிலோ வெல்லம், 2 கிலோ பயறு மாவு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். உப்புமா பதம் வருவதற்கு எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு நாட்டு மாட்டுச் சிறுநீரை கலக்க வேண்டும். பின்பு உருட்டி நிழலில் காயவைத்து தேவைப்படும் போது உதிர்த்துப் பயன்படுத்தலாம்.

### நன்மைகள்

- விதைநேர்த்தி செய்ய ஜீவாமிர்தம் மிகவும் உகந்ததாகும். விதைநேர்த்தி செய்ய விதைகளை இந்த கரைசலில் 2 மணி நேரம் ஊற விட வேண்டும். நாற்றுகளாக இருந்தால் அதன் வேர்களை நன்றாக நனையவிட்டு பிறகு நடவு செய்ய வேண்டும்.
- ஜீவாமிர்தம் பாய்ச்சப்படும் பயிர்களை எந்த நோயும் தாக்காது.
- ஜீவாமிர்தம் நீரில் கலந்து பயன்படுத்தும் போது மண்புழுக்கள் வரவு அதிகரிக்கிறது .
- வேர் அழுகல், வேர்க்கரையான், வேர்ப்புழு நோய்கள் தடுக்கப்படும்.
- ஜீவாமிர்தம் அனைத்து வகை மண்ணையும் சத்துநிறைந்த மண்ணாக மாற்றிவிடுகின்றது.
- ஜீவாமிர்தம் தெளிப்பதால் நுண்ணுயிர்களின் வளர்ச்சி பல மடங்கு அதிகரிக்கிறது.



## Tiruvannamalai District

We, the members of Dhamodharan Small group of Chengam Center, Tiruvannamalai District have 7 acres of land, in which, we have planted teak trees in two acres of land, in the balance 5 acres we are practicing food crops like, groundnut, paddy. We have 602 trees in our grove. We are participating in TIST Node and training programs, and we are following the best practices, like use of natural fertiliser, get more yield with minimum expenditure and practicing intercrops in between the trees with the help of learnings from the training program. We are taking care of our trees in good way. Similarly, we are requesting other small groups to follow the natural way in farming. TIST tree stipend is of good benefit to us and we thank TIST for this.

## திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் மையம் தாமோதரன் சிறுகுழு எங்களுக்கு 7 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் இரண்டு ஏக்கர் தேக்கு மரக்கன்றுகள் வைத்துள்ளோம். மீதம் 5 ஏக்கரில் வேர்க்கடலை, நெல், ஆகியவை சாகுபடி செய்து வருகிறோம். தற்போது எங்கள் தோட்டத்தில் 602 மரக்கன்றுகள் உள்ளன. மேலும் டிஸ்ட் இந்தியா நடத்தும் கணுக்கூட்டம் மற்றும் பயிற்சி கூட்டங்களில் கலந்து கொண்டு அதில் கூறப்படும் கருத்துக்கள், இயற்கை உரம் இடுதல், குறைந்த செலவில் அதிக வருமானம் ஈட்டுவதில், ஊடு பயிர் செய்வது போன்ற பயிற்சிகளில் கலந்து கொண்டு எங்கள் மரங்களுக்கு இடையே ஊடு பயிர் செய்தோம். மரங்களை நன்கு பராமரித்து வருகிறோம். எங்கள் மரங்களுக்கு இயற்கை உரங்களை பயன்படுத்தி வருகிறோம். இதுபோல் மற்ற சிறு குழுக்களுக்கு இயற்கை உரங்களை இட்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம். எங்கள் குழுவுக்கு டிஸ்ட் இந்தியா வழங்கிவரும் ஊக்கத்தொகையும் எங்களுக்கு பெரும் உதவியாக உள்ளது. இதற்கு டிஸ்ட் இந்தியாவிற்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



## Vellore District

We, the members of Indian Small Group of Mambakkam Village, Arani Center of Tiruvallur Disrict have planted teak trees and monitoring it. We are practicing short time food crops like groundnut, greengram as intercrops. We are also receiving tree stipend from TIST to grow trees. We are getting annual income from our food crops. Also, we are receiving good information and training materials from TIST employees through WhatsApp and that is of good benefit to us. We are requesting small groups to make use the Whatsapp information. We thank TIST India on behalf of our small group.

## வேலூர் மாவட்டம்

வேலூர் மாவட்டம், ஆரணி மையம், மாம்பாக்கம் கிராமத்தில் உள்ள இந்தியன் சிறுகுழு ஆகிய நாங்கள் தேக்கு மரக்கன்றுகள் வைத்து பராமரித்து வருகிறோம். எனவே இம்மாதம் மரங்களுக்கு இடையே ஊடுபயிராக வேர்க்கடலை மற்றும் உளுந்து, பச்சைப்பயிறு, போன்றவைகளை பயிர்செய்து வருகிறோம். மரங்களை வளர்க்க டிஸ்ட் இந்தியா தரும் ஊக்கத்தொகையும் பெறுகிறோம். நாங்கள் பயிர் செய்த வித்துக்களின் மூலம் வரும் வருமானமும் எங்களுக்கு வருடாவருடம் கிடைக்கிறது. மேலும் மாதந்தோறும் வாட்ஸ்அப் மூலம் டிஸ்ட் இந்தியா ஊழியர்கள் வழங்கும் செய்திகள் மற்றும் பயிற்சிகள் அனைத்தும் படித்து பார்த்து நல்ல பலனை அடைகிறோம். இதனைப் படித்துப் பார்த்து சிறு குழுக்கள் பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். டிஸ்ட் இந்தியாவிற்கு எங்கள் சிறுகுழுவின் சார்பாக நன்றியை தெரிவித்துகொள்கிறோம்.

